**செய்தி வெளியீடு எண்: 378** **நாள்: 26.06.2019**

## செய்தி வெளியீடு

சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களின் 114ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, தியாகராய நகரில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு இன்று (26.6.2019) மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களின் தமிழ் தொண்டினைப் போற்றிடும் வகையில் அன்னாரின் பிறந்தநாள் அன்று அவரது திருவுருச் சிலைக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சிறப்பிக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 14.2.2019 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண். 110ன் கீழ் அறிவித்தார்கள். அதன்படி, ம.பொ. சிவஞானம் அவர்களின் பிறந்தநாள் இந்த ஆண்டு முதல், அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசால், தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், ‘சிலம்புச் செல்வர்’ ம.பொ. சிவஞானம் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 26ஆம் நாள், இந்த ஆண்டு முதல் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

அதன்படி, சிலம்புச்செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் சென்னை, தியாகராய நகரில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு இன்று(26.6.2019) காலை மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள், தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ப. சத்தியா அவர்கள், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழக தலைவர் திருமதி. பா. வளர்மதி அவர்கள் கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு. உல. இரவீந்திரன், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**